(இ) உதகை அரசினர் கலைக்கல்லூரி மாணவர்கள் போராட்டம் குறித்து

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு சிறப்புக் கவன ஈர்ப்பு. திரு. எச்.எம். ராஜு அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். உதகமண்டலத்திலுள்ள அரசினர் கலைக் கல்லூரியைப் பற்றிய பிரச்சினையை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன்.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச அனுமதித்த தங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டம் உதகையில் உள்ள அரசு கலைக் கல்லூரி 1955–ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, கடந்த 40 ஆண்டுகாலமாக சீரும் சிறப்புமாக செயல்பட்டு வருகிறது. தற்பொழுது 1340 மாணவர்களும் 650 மாணவியர்களும் பயின்று வருகிறார்கள். கடந்த சில வாரங்களாக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும், முதல்வருக்கும் சரியான ஒத்துழைப்பு இல்லை என்ற குறைபாடு இருந்துவருகிறது. இதற்காக மாணவர்கள் 4 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். வருடாந்திர மாணவர் பேரவைத் தேர்தலுக்குப் பின்பு இதுவரையில் ஆரம்ப விழா நடைபெற முதல்வர் அனுமதி வழங்கவில்லை என்றும், காவல் துறையினர் வகுப்புகள் நடைபெறும்பொழுது கல்லூரி வளாகத்திற்குள் வருவதற்கு அனுமதி தரக்கூடாது என்றும், கல்லூரியை விட்டு இடைநீக்கம் செய்யப்பட்ட ஐந்து மாணவர்களை உடனடியாக அவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு அனுமதிக்கும் வகையில் இடைநீக்கத்தை ரத்து செய்ய வேண்டியும், மேற்படி ஐந்து மாணவர்கள் மீது காவல் துறையினருக்கு முதல்வர் கொடுத்த புகாரைத் திரும்பப் பெறவேண்டும் என்றும் கடந்த ஐந்து வாரங்களாக மாணவ, மாணவியர் வகுப்புகளை புறக்கணித்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். இச்சூழ்நிலையில் 17–11–95 முதல் தேர்வுகள் நடைபெற இருப்பதால் சுமார் 2,000 மாணவ, மாணவியருடைய எதிர்காலம் பாதிப்பு அடையும் வாய்ப்பு உள்ளது. ஆகவே மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்த முக்கியமான பிரச்சினையில் தலையிட்டு கல்லூரி சுமூகமாக நடைபெற வழிவகை செய்ய முற்படுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

1995 நவம்பர் 10]

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகை அரசு கலைக் கல்லூரியில் இந்தக் கல்வியாண்டு தொடக்கத்தில் சில சீனியர் மாணவர்கள் கல்லூரியில் புதியதாகச் சேரும் மாணவ, மாணவியரை 'ராகிங்' எனப்படும் துன்புறுத்தும் செயல்களில் ஈடுபட்டதால், பெற்றோர்–ஆசிரியர் கழகம் மற்றும் பெற்றோர்களின் புகார்களின் அடிப்படையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் கல்லூரியில் ஒழுங்கீன நடவடிக்கைகள் மற்றும் அரசுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல் போன்றவற்றிற்காக மூன்று மாணவர்கள் கல்லூரியிலிருந்து விலக்கிவைக்கப்பட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து கல்லூரியில் பதட்ட நிலை ஏற்பட்டதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கல்லூரி முதல்வர் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். கல்லூரி முதல்வருக்கும் ஒருசில ஆசிரியர்களுக்கும் இடையில் கருத்து மோதல்கள் இருப்பதாகவும், மாணவர்களை ஒரு சிலர் தூண்டி வருவதாகவும் சொல்லப்படுகிறது. எனினும் கல்லூரி இயல்பாக செயல்பட்டு வருவதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. *8–11–95* முதல் *19–11–95* வரை கல்லூரிக்கு பருவ விடுமுறை விடப்பட்டிருக்கிறது. *17–11–95*-ல் பல்கலைக் கழகத் தேர்வுகள் தொடங்கப்பட இருக்கின்றன. இந்தக் கல்லூரிப் பிரச்சினைகள் குறித்து விசாரணை நடத்தி உடன் அறிக்கை தருமாறு கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அவரது அறிக்கையின் அடிப்படையில் அரசு தக்க நடவடிக்கை மேற்கொண்டு கல்லூரி சுமூகமாக செயல்பட விரைவில் ஏற்பாடுகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3. கவன ஈர்ப்பு

(அ) தொழுநோய்க் கட்டுப்பாட்டு கிளை நிலையங்களை மூடிவிடுவதாகக் கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்படி, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் வே. தம்புசாமி, ஜி. பழனிசாமி, சி. ஞானசேகரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொழு நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது எனக் காரணம் காட்டி 110 தொழுநோய்க் கட்டுப்பாட்டு கிளை நிலையங்களை மூடி விடுவது என்று தமிழக அரசு முடிவு எடுத்திருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் முதல் முதலில் மத்திய அரசு மானியத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இத்திட்டம் மாநில அரசால் நடத்தப்படுகிறது. இத்திட்டத்தின் நோக்கம் கி.பி. 2000-க்கு முன்னரே தொழுநோயை முற்றிலும் ஒழிப்பதாகும். தொழுநோய் சிகிச்சைக்கு ஆரம்பத்தில் ஒரு மருந்து மட்டும் கொடுக்கப்பட்டது. இம்முறையில் நீண்ட நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. பின்பு, 1983-ஆம் ஆண்டு ஒரு புதிய சிகிச்சை முறை மும்முனை தடுப்பு மருந்து (M.D.T.) கண்டுபிடிக்கப்பட்டு, வடாற்காடு மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலே குறித்த முறையில் அமோக வெற்றியை கண்டு, படிப்படியாக ஒவ்வொரு மாவட்டம் என்று தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் அமுலுக்கு வந்துள்ளது. இம்மும்முனை மருந்து சிகிச்சையினால் ஆரம்பத்தில் தொழுநோயின் அறிகுறி 1000-க்கு 11-8 என்று இருந்து விகிதாச்சாரம், தற்போது 1000-க்கு 0-8 என்ற நிலைமை ஏற்பட்டதின் காரணம், தொழுநோய் திட்டத்தின்கீழ் பணிபுரியும் பணியாளர்களின் கடின உழைப்புதான்.

2. தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தில் கிடைத்துள்ள வெற்றியை கருத்தில் கொண்டு, இத்திட்டத்தை மாற்றி அமைத்து, இதில் பணிபுரியும் பணியாளர்களின் சேவையை இன்னமும் சீராகவும், சிறப்பாகவும் பயன்படுத்த அரசு கருதுகிறது. தற்பொழுது இயங்கும் திட்டத்தின்படி ஒரு தொழுநோய் ஆய்வாளருக்கு 20,000 மக்கள் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. இதனை மாற்றி ஒரு தொழுநோய் ஆய்வாளருக்கு 5,000 மக்கள் தொகை என்று நிர்ணயித்தால், இவர் ஒவ்வொரு தொழிலாளர்களிடையேயும், பொதுமக்கள் மத்தியிலும் உள்ள நோயாளியை செம்மையாக கவனிக்க முடியும். இதன் பொருட்டு இதனை பல்நோக்கு சுகாதாரத் திட்டத்துடன் இணைக்கும் கருத்து

பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசாங்கத்தால் இத்திட்டத்திற்கு (கருவிகள், மருந்துகள் நீங்கலாக) எந்த ஒரு மான்யமும் கிடைக்காத இச்சமயத்தில் தமிழகத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் காணப்படும் தொழுநோயாளியை கண்டுபிடித்து பூரண சிகிச்சை அளிப்பதுதான் தமிழகத்தின் நோக்கமாகும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையை நான் பார்த்தேன். அதிலே 1983-வது ஆண்டு புதிய சிகிச்சை முறை கடைப்பிடிக்கப்பட்டதன் காரணமாக 1000-க்கு 11-8 என்று இருந்த நோயாளிகள் 1000-க்கு 0-8 என்று குறைக்கப்பட்டிருக்கிறார்கள். அடுத்து 20,000 மக்கட்தொகை அடிப்படையில் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பணி குறைக்கப்பட்டு 5,000 என்று அவர்களுக்கு வழங்குவதற்கு அரசு முடிவெடுத்திருக்கிறது. ஆகவே, இந்தக் காரணங்களால் நோய் ஒழிக்கப்பட்டு குறைந்து இருக்கிற காரணத்தால், ஆரம்ப சுகாதார நிலையத்தோடு இதையும் இணைத்துவிட அரசு எண்ணியுள்ளது என்று அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. ஆனால், பொதுவாக இதற்கு மத்திய அரசு நிதி வழங்கவில்லை என்ற காரணமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பொதுவாக மத்திய அரசு நிதி வழங்கவில்லை என்ற காரணத்திற்காக தமிழகத்திலே ஒரு அபாயகரமான நோய் சிகிச்சைக்கான திட்டங்களை நாம் கைவிட்டுவிட முடியாது. அந்த வகையில் பார்ப்போமேயானால், நோய் குறைந்து இருப்பதை வரவேற்றாலும், ஆனால், அந்த நோய் ஆரம்பத்தில் கண்ணுக்குத் தெரிவதில்லை; நாளாக நாளாகத்தான் அதனுடைய கொடுமைத் தன்மைகள் வெளிப்பட்டுத் தெரிய ஆரம்பிக்கின்றன. அதற்குப் பிறகுதான் தனக்கு ஒரு நோய் இருப்பதாகவே அந்த நோயாளிக்குத் தெரியக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆனால், இப்போது இருக்கிற நடைமுறைத் திட்டம், கிராமங்களுக்குச் சென்று சோதித்து, குழந்தைகளுக்கு பெரியவர்களுக்கு சோதித்து இந்த நோய் இருக்கிறதா என்று கண்டுபிடித்து, அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஆரம்பத்திலேயே சிகிச்சை அளிக்கிற...

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசிக்கொண்டிருப்பதாகக் கருதுகிறீர்களோ என்று நினைக்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: இல்லை, ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் தானே, ஒரு விளக்கம் மட்டும் கேட்க வேண்டும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனாலே, இந்தத் திட்டம் கைவிடப்படுமேயானால், மேலும் நோய் பரவுவதற்கான ஒரு அபாயம் இருக்குமே தவிர, நோய் குறைவதற்கான ஒரு வாய்ப்பு இருக்காது. ஆகவே, மீண்டும் பரிசீலித்து இதை மூடாமல் இருக்க அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள். கவனத்திற்குத்தான் கொண்டு வந்து விட்டீர்களே. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மூடிவிடுவது என்று முடிவே எடுக்கவில்லை. நீங்களாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள், இதை மூடி விடுகிறீர்கள், மூடி விடுகிறீர்கள் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள், அப்படி ஒரு முடிவே எடுக்கவில்லை. இதை இன்னும் கொஞ்சம் இன்டென்சிவாக செய்வதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. நீங்கள் ஆரம்பத்திலே சொன்னதைப்போல, துவக்கத்திலே ஆயிரம் பேர் என்று சொன்னால், ஆயிரம் பேருக்கு 11.8 என்ற வகையிலே இந்த நோயாளிகள் இருந்தார்கள். இந்த அரசு எடுத்த முயற்சியின் காரணமாக, இந்த சிகிச்சையின் காரணமாக அது குறைந்து, ஆயிரத்துக்கு 0.8 என்ற அளவுக்கு நாம் குறைத்து இருக்கிறோம். தொழுநோய் ஆய்வாளர் ஒருவருக்கு 20 ஆயிரம் மக்கள் தொகை என்று கணக்கு கொடுக்கப்பட்டு இருந்தது. அதன்படி ஏறத்தாழ 2236 பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது அல்லாமல், இந்தத் துறையிலே மல்டி பர்ப்பஸ் ஹெல்த் ஒர்க்கர்ஸ் என்று சொல்லி, ஆண் பணியாளர்களைச் சேர்ந்தவர்கள் 6500 பேர் இருக்கிறார்கள். எனவே, இவர்களுக்கு ஏற்கெனவே சில பணிகள் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன. அவர்களுக்கு மேலும் சில பணிகளை ஒப்படைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது; அந்த கால அவகாசம் அவர்களுக்கு இருக்கிறது. எனவே தான் இவர்கள் இருவரையும் ஒன்றாக இணைத்து, 20 ஆயிரம் பேருக்கு ஒருவர், 7, 8 கிராமங்களை ஒன்றாக அடக்கி போய்ப் பார்ப்பது என்பது சிரமமாக இருக்கிறது என்று கருதி, இதை 5 ஆயிரம் மக்கள் தொகைக்கு

1995 நவம்பர் 10] [திரு. சு. முத்துசாமி]

ஒருவராக வைத்து, அந்தப் பணிகளை ஒருங்கிணைத்துக் கொடுக்கலாம் என்று நாங்கள் முடிவு எடுத்தோம். இதிலே சென்டரை நாம் மூடப் போவது கிடையாது. ஆனால், பணியாளர்களுக்கு பணியை ஒழுங்காக முறைப்படுத்தி நாம் பகுத்துக்கொடுக்க, பகிர்ந்து கொடுக்க நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். ஆனால், அந்த சென்டர் அத்தனையும் அப்படியே இருக்கும். இவர்கள் கண்டுபிடிக்கிற நோயாளிகள், எங்கே போய் சிகிச்சை பெறுகிறார்களோ, அந்த இடங்கள் அப்படியே இருக்கும். ஆனால், 20 ஆயிரம் பேரை பார்த்துக் கொண்டிருந்த பணியாளர்கள், 5 ஆயிரம் பேரை பார்ப்பார்கள். இவர்களோடு இன்னொரு பணியாளர் குரூப்பையும் நாம் சேர்க்கிறோம். இதுதான் அரசாங்கம் எடுத்து இருக்கிற முடிவு. இந்த முடிவைக் கூட நாங்கள் தன்னிச்சையாக செய்து விடவில்லை. இதை, அந்தச் சங்கங்களோடு பேசி, அவர்களுடைய பதவி உயர்வுகளிலே ஏதாவது பிரச்சினை வருமா என்று பார்த்து, அதற்கெல்லாம் பிரச்சினை இல்லாமல் செய்கிற வகையிலேதான் நாங்கள் முடிவு எடுத்து இருக்கிறோம். இதிலே பெரும்பகுதியானவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ, இரண்டொரு சங்கங்கள்—உங்களுக்கு நண்பர்களோ, அது எங்களுக்குத் தெரியாது, அவர்கள் மட்டும் ஒப்புக்கொள்ளாமல் இருக்கிறார்கள்; அவர்களோடு பேசிக் கொண்டிருக்கிறோம். எனவே அவர்களோடு பேசி, அவர்களுக்கு ஒரு திருப்திகரமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திய பின்புதான் இதைச் செய்ய வேண்டும் என்று நாங்கள் கருதி இருக்கிறோம். அதோடு மத்திய அரசாங்கம் இதைச் செய்ய வேண்டும் என்று கருதி சொல்லி இருக்கிறார்கள். அதை வலியுறுத்துவதற்காகத்தான் ஞானசேகரன் என்னுடைய கவனத்திற்கு கொண்டுவந்து இருக்கிறாரோ என்னவோ, எனக்குத் தெரியாது. எனவே, மத்திய அரசாங்கம் இதைச் செய்ய வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். டபிள்யூ. எச்.ஓ.விலே இருந்தும் இதைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறார்கள். இதை அடிக்கடி கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, இதை இன்னும் கொஞ்சம் சிறப்பாகச் செய்வதற்கு, 5 ஆயிரம் மக்கள் தொகையை ஒருவர் போய் பார்ப்பதற்கு—20 ஆயிரம் பேரை பார்ப்பதைவிட சிறப்பாக இருக்கும் என்று கருதி இதை அரசாங்கம் செய்வதற்கு முயற்சி எடுத்து இருக்கிறது. எனவே, தவறு இல்லை என்று சொல்லி நீங்கள் ஒப்புக்கொண்டு இதை ஏற்றுக்கொள்வீர்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, திரு. தம்புசாமியே கேட்டு விட்டார் என்று கருதுகிறேன். இனிமேல் செய்வதுபற்றி

புரபோசல் தான் இருக்கிறது என்கிறார் அமைச்சர். கேளுங்கள், திரு. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மை.. ஆனால், இந்த தொழுநோய் கட்டுப்பாடு என்பது, அநேகமாக நம்முடைய மருத்துவத் துறையிலே வித்தியாசமான ஒன்று. பொதுவாக நோயாளிகள் மருத்துவர்களை தேடி, மருத்துவமனையை தேடி வந்து தங்களுடைய வியாதிகளைச் சொல்லி குணப்படுத்துகிற பழக்கம் இருந்தபோதிலும்கூட, ஆனால், இந்த தொழுநோய் ஊழியர்கள் அந்த நோயாளிகளைத் தேடி, தங்களுடைய இருக்கைக்கு காலை 5 மணிக்கு சென்று வைத்தியம் பார்த்து, மருந்து கொடுத்து, சாப்பிட்டார்களா என்று பார்க்கிற ஒரு விநோதமான பிரிவு இந்த மருத்துவத் துறை தொழுநோய்க் கட்டுப்பாட்டு பிரிவிலே இருக்கக் கூடிய பணியாளர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அந்த விளக்கக் குறிப்பில் கூட உண்மையிலேயே அந்த ஊழியர்களைப் பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள். சிறந்த முறையிலே பணியாற்றுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் இது ஒரு தேசிய தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம். அதிலே அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆக இன்றைக்கு அந்த ஊழியர்களுக்கு இருக்கிற அச்சமெல்லாம் சிறந்த முறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறோம் ஆகவே, நோயாளிகள் குறைந்துவிட்டார்கள் என்ற அந்தக் காரணத்தைக் காட்டி, மருத்துவ துறையிலுள்ள மருத்துவர்களோடு இணைத்து விட்டால் எங்களுக்கு அந்தப் பணியைச் சரியாக செய்ய முடியாது என்கிற அச்சத்தைச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நோயை இன்னும் சரியாகக் கணக்கிட்டு தீவிரப்படுத்தி செய்ய வேண்டும் என்கிற நோக்கத்தோடு சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் குறிப்பாக இது போன்று நோயாளிகளை அநேகமாக பல்வேறு இடங்களில்-இது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போன்று உடனடியாகக் கண்டுபிடிப்பதிலே சிரமம் இருக்கிறது. குறிப்பாக எங்களுடைய மாவட்டத்தில் (குறுக்கீடு) நான் சொல்லி விடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை நான் ஒத்தி வைப்பு தீர்மானம் மாதிரி இதைப் பேசவில்லை.

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் எல்லாவற்றையும் பேசிவிட்டார்கள், போதும். இதிலே மேற்கொண்டு கேள்வியே இருக்காது என்று பார்த்தேன்.

1995 நவம்பர் 10]

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இதை மருத்துவத் துறையோடு திரும்ப இணைத்துவிடாமல் இருப்பதை—மாண்புமிகு அமைச்சருடைய வாக்குறுதியை நிறைவேற்றுமாறு கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன். இதை விட்டுவிடும் எண்ணமே அரசாங்கத்திற்கில்லை. இதை இன்னும் சிறப்பாகச் செய்வதற்குத்தான் —வருகிற 2000-ஆம் ஆண்டிற்குள்ளாக— தொழுநோயே இல்லை என்ற அளவிற்கு அறவே ஒழிக்க வேண்டும் என்பதற்காக, நாம் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம். அதைக் கண்டிப்பாகச் செய்ய முடியும் என்று நாங்கள் கருதுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரே சொன்னார். சிலர் காலை 5 மணிக்கு போய் சிரமப்பட வேண்டியிருக்கிறது என்று. உண்மையிலேயே அது சிரமமான காரியம். ஒவ்வொரு வீடாகப் போக வேண்டும். சில இடங்களிலே அவர்கள் போகிற போது போய் நாளைக்கு வாருங்கள் என்று சொல்லுவார்கள். எனவே, இப்படி எல்லாம் அவர்கள் சென்று, பார்த்துதான் இந்த அளவிற்கு கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, அப்படி சிரமப்படக் கூடியவர்கள் 20000 மக்கள் தொகையைத் தேடி போய் ஊர், ஊராகப் போக வேண்டுமா, 5000 மக்கள் தொகைக்கு உள்ளே சிறப்பாகச் செய்யட்டுமே என்ற அந்த நல்ல நோக்கத்தோடுதான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். இதனால் இது மூடப்படமாட்டாது. அவர்களுடைய பணிக்கு எந்த இடையூறும் வராது. அவர்களுடைய பிரமோசனுக்கு எந்தப் பிரச்சினையும் வராது. இன்னும் சொல்லப் போனால் அவர்கள் குறுகிய இடத்திற்குள்ளேயே இருந்து சிரமம் இல்லாமல் பணியாற்றுவதற்கான வாய்ப்பைத்தான் அரசாங்கம் ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், கேள்வி மட்டும் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், இந்த 110 தொழுநோய்க் கட்டுப்பாடு மருத்துவமனைகள் மூடப்படாது என்ற வாக்குறுதியை அளித்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் அதற்கு ஒரு மாற்றுத்

திட்டத்தைக் கொடுத்து, அந்த 2500 தொழிலாளர்கள் இருக்கக்கூடிய அந்தப் பகுதியை, 5000 மக்கள் தொகையாகக் குறைத்து அதைப் பலநோக்குச் சுகாதார திட்டத்தோடு இணைக்கிறோம் என்றதால்—ஒரு அச்சம் இப்போது வந்து—அதை அறிக்கையிலேகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நீங்கள் பலநோக்கு சுகாதாரத் திட்டத்தோடு இணைத்துவிட்டீர்கள் என்று சொன்னால்—ஏற்கனவே மலேரியா திட்டம் என்று ஒவ்வொரு நகராட்சியிலும் இருந்தது—மலேரியா ஆட்களை எல்லாம் நீங்கள் உங்களுடைய பப்ளிக் ஹெல்த்தில் சேர்த்துவிட்ட காரணத்தால், இப்போது எங்களுடைய வேலூரிலே 1000 பேர் மலேரியாவுக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அதைப்போல ஐ.பி.பி.-5 என்று உங்களிடம் ஒரு நல்ல திட்டம் இருக்கிறது. 'இந்தியன் பாப்புலேஷன் புராஜக்ட்'-அதிலேகூட—இந்த ஆண்டே முடிந்துவிடப் போகிறது என்று சொன்னார்கள். மத்திய அரசு அதற்கு நிதி ஒதுக்கி—இதற்கும்கூட—'வோர்ல்ட் ஹெல்த் சென்டர்'விருந்து 300 கோடி ரூபாய் அதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது நம்முடைய எல்லா மாநிலத்திற்கும் சேர்த்துத்தான். அப்படிக் கொடுக்கப்படுகிற—தமிழ்நாட்டுக்கு கொடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம்—எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்கக்கூடிய அந்தச் சூழ்நிலையில்—இப்போதுகூட மானியம் கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது. மருந்துக்கும், கருவிகளுக்கும் கொடுக்கிறார்கள். ஏற்கெனவே இந்தத் துறையிலே நீங்கள் சில பேர்களை பணி நியமனம் செய்துவிட்ட பிறகு அவர்களை நீங்கள் மாற்றி அமைப்பது என்று சொன்னால், 5000 பேருக்கு நாங்கள் குறைக்கப் போகிறோம் என்று சொன்னால், 20000 பேர்களை அவர்கள் சந்திப்பது சிரமம், அதற்காக 5 ஆயிரம் பேருக்கு குறைப்பதாக இருந்தால் இந்த 110 என்று இருக்கக்கூடிய தொழு நோய்க் கட்டுப்பாடு நிலையங்கள் கிட்டத்தட்ட அதிகமாக்கப்பட வேண்டுமேயொழிய மூடப்படக்கூடாது. ஆகவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் நீங்கள் மானியம் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி—மிகக் கொடிய நோய், இரத்தக் கண்ணீர் எம்.ஆர்.ராதா-க்களை நாம் இப்போது காண முடியவில்லை—அந்த அளவிற்கு இந்தத் துறை மிகச் சிறப்பாகச் செயலாற்றி இந்தத் தொழுநோயைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறது.

1995 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காணும் வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: ஆகவே அமைச்சர் அவர்கள் பலநோக்கு சுகாதாரத்தோடு இதை இணைத்து விடாமல், இதைத் தனியாகவே, தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையங்கள் 110 என்பதை இன்னும் 300, 400 என்ற அளவில் அதிகரித்து—மக்கள் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற நீங்கள்—அந்த மருத்துவ மனைகளை அதிகரிக்க வேண்டுமே தவிர—நீங்கள் அலுவலர் சங்கங்களை எல்லாம் கேட்டுக் செய்கிறோம் என்று சொன்னீர்கள். தமிழ்நாடு தொழுநோய் தடுப்பு அலுவலர் சங்கம்தான் இதுபோன்ற ஒரு கோரிக்கையை வைத்து, போராட்டம், உண்ணாவிரதம் போன்றவற்றை செய்து கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த 110-ம் மூடாமல் இருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பலநோக்கு சுகாதாரத்தோடு இதை நீங்கள் இணைத்து விடாமல், தனியாகவே இயங்க விடுவீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன், மத்திய அரசின் நோக்கம்கூட இதுவாக இருக்கிறது என்று. அதை எப்போதுமே உறுப்பினர் ஏற்றுக்கொள்வதில்லை. அதுபற்றி எனக்கு இப்போது கவலையும் இல்லை. நான் ஏற்கெனவே சொன்னேன்—மல்டி பர்பஸ் ஹெல்த் ஸ்கீம்—உதாரணமாக நீங்கள் வேலூரிலே இருந்து சென்னைக்கு ஏதாவது ஒரு வேலையாக வருகிறீர்கள் என்று சொன்னால், இன்னொரு வேலைக்காக உங்கள் மகனும் அங்கே இருந்து வரத் தேவையில்லை.

பிற்பகல் 12-10

அதைத்தான் இப்போது சொல்கிறேன். இந்த வேலையைப் பார்ப்பதற்காக அவர்கள் போகிறார்கள். 2, 3 பணிகள் அவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணியையும் சேர்த்து அவர் செய்தால் சுலபமாக முடியும். 5, 6 பேர்கள் பல்வேறு வேலைகளுக்காகப் போய் எல்லோரையும் தொந்தரவு செய்தவற்குப் பதிலாக 5000 பேரை கொடுத்தால் அவர்கள் முழுமையாக எல்லாவற்றுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்கள். அந்த நோக்கத்தில் தான் அரசாங்கம் இதைச் செய்கிறது. 110 சென்டர்களை மூட வேண்டுமென்று அரசாங்கம் நினைக்கவில்லை. நீங்கள் தான் மூடிவிட்டதாகச் சொல்கிறீர்கள்.

TRUTH ALONE TRIUMPHS